முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 131/2018

வாதி தரப்பு சாட்சி.2 சுப்பிரமணி திரு.ஆர்.ஞானசேகர் பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 02.09.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுப்பிரமணி | கிராமம் | |
| த/பெ / க/பெ. | | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | |

**4, 11, 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) எனது மனைவி பெயர் இளஞ்சியம். வா.சா.1 தங்கவேல் இளஞ்சியத்தின் அண்ணன். தங்கவேல் தகப்பனார் பெயர் குட்டியப்பன். ஆண்டியப்ப கவுண்டர், செந்தா கவுண்டர் இருவரும் சகோதரர்களா என்றால் தெரியவில்லை. 4, 5 பிரதிவாதிகளின் தகப்பனார் பெயர் மாரியப்பன் என்றால் சரிதான். மாரியப்பன் உடன்பிறந்தவர்கள் வள்ளியம்மை, பழனியப்பன், பழனியம்மாள் என்றால் சரிதான். மாரியப்பனின் பெற்றோர்கள் தான் முத்துசாமி பட்டாயி என்றால் சரிதான். பட்டாயி தாயார் பெயர் கருப்பாயி என்றால் சரிதான். பட்டாயின் தகப்பனார் பெயர் செந்தாகவுண்டர் என்றால் செந்தாகவுண்டர் தெரியும். ஆனால் அவரது மகள்தான் பட்டாயியா என்று தெரியவில்லை. ஆரம்பத்தில் சர்வே எண்கள்.212/10 ஏ முதல் 212/10 ஜி வரையிலும் மற்றும் சர்வே எண்கள் 212/11 ஏ, 212/11 பி ஆகியவற்றில் வள்ளியம்மை கருப்பாயி அனுபவித்தார்களா என்றால் தெரியவில்லை.

2) வள்ளிம்மை கருப்பாயி இருவரும் சொத்துக்களை பாகம் செய்தார்களா என்றால் அதுபற்றி தெரியாது. தாவா சொத்து சர்வே எண் தெரியுமா என்றால் 212/டி மற்றும் 212/சி ஆகும். தாவா சொத்தில் கோவில் உள்ளதா என்றால் கன்னிமார் கோவில் உள்ளது. அது சர்வே எண்.212/டி ஆகும். மேற்படி கோவிலில் அனைவரும் சாமி கும்பிடுவார்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் தரப்பினர்கள் கும்பிடுவார்களா என்றால் இல்லை. தாவா சொத்தின் அனுபவம் இவ்வழக்கின் தரப்பினர்களிடம்

இல்லை என சொல்கிறேன் என்றால் ஆமாம். ஆண்டியப்பன் மகள் முருகாயி என்றால் தெரியவில்லை. முருகாயி கணவர் பழனியாண்டி என்பவரை தெரியுமா என்றால் தெரியும். கோவில் உள்ள நிலத்தை யார் அனுபவம் செய்கிறார்கள் என்றால் யாரும் அனுபவிப்பதில்லை. தாவா தரப்பினர்களும் அனுபவிப்பதில்லை. வள்ளியம்மைக்கு என்னென்ன சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்பதும், கருப்பாயிக்கு என்னென்ன சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தில் வீடு எதுவும் கிடையாது. நான் வாதிக்கு நெருங்கிய உறவினர் என்பதால் பொய்யான சங்கதிகளுடன் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>7 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

பெருமாள் வகையறா எதற்காக அரசை தரப்பினராக சேர்த்துள்ளார்கள் என்றால் அதுபற்றி தெரியவில்லை. வழக்கு விபரங்கள் பற்றி முழுமையாக தெரியாமல் நான் அளித்துள்ள சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**
**Kulithalai.**